# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066901

1. District மாவட்டம்: Nilgiris PS: காவல்நிலையம்: VEAC, ooty Year ஆண்டு: 2019 FIR No மு.த.அ. எண்: 03 Date நாள்: 28.02.2019

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 of PC (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 28.02.2019 Prior 1240 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 28.02.2019 Time to : நேரம் வரை 21.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 2km west.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address முகவரி: District Adi-Dravidar & Tribal welfare office, Additional collectorate building, Finger Post, ooty.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் H. Prakash (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Hindu (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் : Husur sarishtadar i/c District inspection cell officer (g) Address முகவரி : District collectorate. udhagamandalam. The Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
R. manivelan, District Adi-Dravidar & Tribal welfare officer, udhagamandalam, The Nilgiris.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

GCP-240-34(Type-2) 90,000 Cps -2T 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/2/19 | 28/2/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge/ Police Station
காவல் நிலைய் பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28.02.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை .....................No. எண் ........
ஆய்வாளர், உ.த.க. பிரிவு
நீலகிரி மாவட்டம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

ஊ.த.க.பிரிவு கு.எண்.3/2019/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:-

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 28.02.2019-ம் தேதி, இரவு 21.00 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.H.பிரகாஷ் அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), மாவட்டாட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர் பொருள்: திடீர் தணிக்கை - நடவடிக்கை கோருதல் - சம்மந்தமாக. பார்வை: நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ப.வெ.அ2.எண்/30/2019 நாள் 28.02.2019. இன்று (28.02.2019) உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் மற்றும் பார்ட்டி சகிதம், உதகமண்டலம், பிங்கர்போஸ்ட், கூடுதல் மாவட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் அவர்களது எல்லைக்குட்பட்ட பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம் பள்ளியில் கலைநிகழ்ச்சிகள் நடத்த கொடுக்கப்பட்ட பணத்தில் கையூட்டாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் இவ்வலுவலகத்தை இன்று (28.02.2019) 12.40 மணி முதல் 16.00 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம். இந்த திடீர் தணிக்கையின்போது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.R.மணிவேலன் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கையின் மேஜையின் இடது பக்க டிராயரில் பணம் ரூ.6,35,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) இருந்தது. இந்த பணம் குறித்து அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் அப்பணம் கைப்பற்றப்பட்டது. அப்போது அங்கிருந்த பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் R.சேகர் மற்றும் திருமதி.முத்தம்மாள் ஆகியோர்களை விசாரிக்க அவர்கள் தங்களது பள்ளிகளில் கலைநிகழ்ச்சி

B.Geethalakshmi
28/2/19

நடத்துவதற்கு அரசால் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.1,00,000/ (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) காசோலையாக வழங்க மணிவேலன் தனக்கு கையூட்டாக தலா ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) கேட்டதாகவும் அதை தாங்கள் சிறிது நேரத்திற்கு முன்பாக கொடுத்ததாகவும் கூறினார். அதற்கான வாக்குமூலங்களையும் அளித்துள்ளனர். அப்போது இந்த திடீர் தணிக்கை சம்பந்தமாக செயல்முறை ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த செயல்முறையினையும், கைப்பற்றப்பட்ட ரொக்கப் பணம் ரூ.6,35,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) மற்றும் திருமதி.முத்தம்மாள், தலைமையாசிரியை, காஞ்சிக்கொல்லி பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளி என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட காசோலை எண்.491488, பாரத வங்கி, உதகமண்டலம் நாள் 21.2.2019 மற்றும் தலைமை ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இடம்:உதகமண்டலம் நாள்: 28.02.2019 ஒப்பம் (H.பிரகாஷ்) தலைமைப் பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் மாவட்ட ஆயுவுக்குழு அலுவலர் (பொறுப்பு), மாவட்டாட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். நகல்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. நகல்: மாவட்ட ஆட்சித் தலைவர், உதகமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. Submitted: Received the above written complaint along with the proceedings, bribe amount Rs.6,35,000/- and cheque No.491488 on 28.02.2019 at 21.00 hrs and registered the same in V & AC, the Nilgiris Cr.No.3/2019 u/s 7 of PC (Amendment) Act 2018. ஒப்பம் கீதாலட்சுமி 28.2.219 Inspector of Police, V & AC, The Nilgiris. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: **Proceedings of the Surprise Check conducted on 28.02.2019 between 12.40 hrs and 16.00 hrs at District Adi Dravidar and Tribal Welfare Office, Additional District Collectorate Building, Finger Post, Udhagamandalam, the Nilgiris District.** முன்னிலை: 1) திரு.H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி

Geethalakshmi
28/2/19

மாவட்டம். இன்று 28.02.2019-ஆம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம். மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), பொறுப்பு மாவட்ட மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம் திரு.H.பிரகாஷ், ஆகிய நான், மாவட்ட ஆய்வுக்குழு பணியை பார்த்து வரும்போது இன்று நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் அவர்களது எல்லைக்குட்பட்ட பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடம் பள்ளியில் கலைநிகழ்ச்சிகள் நடத்த கொடுக்கப்பட்ட பணத்தில் கையூட்டாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் பேரில் இவ்வலுவலகத்தை நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் மதியம் 12.40 மணிக்கை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கை சகிதம் உதகமண்டலம் கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தை அடைந்த போது அங்கு முன்புறத்தில் திரு.R.சேகர் என்பவர் நின்றுக்கொண்டிருந்தார். அவரை விசாரிக்க அவர் தான் பந்தலூர் தாலுகாவில் பொன்னாணி பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், தாங்கள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.R.மணிவேலன் நடத்திய கூட்டத்தில் கலந்துக்கொண்டதாகவும். அப்போது அவர் தன் எல்லைக்குட்பட்ட பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகளில் மாணவர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தி கலை மற்றும் இலக்கிய தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த அரசிடமிருந்து ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் தலா ரூ.1 இலட்சம் வீதம் மொத்தமுள்ள 27 பள்ளிக்கூடங்களுக்கு 27 இலட்சம் வந்துள்ளதாகவும், அந்தத்தொகையை காசோலை மூலமாக கொடுப்பதாகவும் தெரிவித்தார். மேலும் தான் அவ்வாறு வழங்க தனக்கு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலிருந்தும் தலா ரூ.50,000/- வீதம் வசூல் செய்து தனக்கு கையூட்டாக கொடுக்கச்சொன்னதாகவும், தன்னை கூடலூர் எல்லைக்குட்பட்ட பள்ளிகளில் இருந்து மணிவேலன் கேட்ட கையூட்டு பணத்தை சேகரித்து வாங்கி வருமாறு சொன்னதாகவும், அதனடிப்படையில்

Geethalakshmi
28/2/19

தான் ஏழு பள்ளிக்கூடங்களிலிருந்து ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.50,000/- வீதம் மொத்தம் ரூ.3,50,000/- வசூல் செய்து தற்போது மணிவேலனை சந்தித்து கொடுத்ததாகவும் அவர் அதை வாங்கி தனது மேஜையின் இடதுபக்க டிராயரில் வைத்துக்கொண்டதாகவும் கூறினார். அவரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நான் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் போலிஸ் பார்ட்டி சகிதம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழன்குடியினர் நல அலுவலர் திரு.மணிவேலன் இருக்கும் அறைக்குள் செல்ல அவர் தன்னுடைய இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரையும் அவரது இருக்கையையும் தணிக்கை செய்ய மணிவேலனுடைய டேபிளின் இடதுபக்க டிராயரில் பணம் ரூ.6,35,000/- இருந்தது. அவைகள் 69 எண்ணிக்கையிலான 2000 ரூபாய் நோட்டுக்களாகவும், 884 எண்ணைக்கையிலான 500 ரூபாய் நோட்டுக்களாகவும், 275 எண்ணிக்கையிலான 200 ரூபாய் நோட்டுக்களாகவும் இருந்தன. இதைப்பற்றி திரு.மணிவேலனிடம் விசாரிக்க இவர் எந்த முகாந்திரமும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். எனவே அப்பணம் தலைமை ஆசிரியர்களிடமிருந்து வாங்கப்பட்ட கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்பட்பையில் பணம் ரூ.6,35,000/-ம் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக அலுவலகத்தை தணிக்கை செய்ய அங்கு முதலில் உள்ள இருக்கையில் திருமதி.முத்தம்மா என்பவர் அமர்ந்து எழுதிக்கொண்டிருந்தார். அவரை விசாரிக்க அவர் தான் காஞ்சிகொல்லி பழங்குடியினர் உண்டு உறைவிட ஆரம்ப பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அனைத்து பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை அழைத்து கூட்டம் நடத்தியதாகவும், அந்த கூட்டத்தில் அனைத்து பள்ளிக்கூடங்களிலும் விளையாட்டு போட்டிகளை நடத்தி கலைநிகழ்ச்சிகள் நடந்த அரசு பணம் ரூ.1 இலட்சம் வழங்கியுள்ளதாகவும், காசோலை மூலமாக அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று சொன்னதாகவும், அதற்கு தனக்கு கையூட்டாக பணம் ரூ.50,000/-ஐ ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலுருந்தும் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னதாகவும் அதனடிப்படையில், தான் திருச்சியிலுள்ள தன்னுடைய சகோதரரிடமிருந்து பணம் ரூ.50,000/-த்தை வங்கி பரிவர்த்தனை மூலமாக பெற்று இன்று திரு.மணிவேலனிடம் கொடுத்ததாகவும் அவர் அதை வாங்கி எண்ணிப்பார்த்து தனது டேபிளின் இடது டிராயரில் வைத்துக்கொண்டார்

Jayageethalakshmi
28/2/19

என்றும், அதன்பின் காசோலையை உதவியாளர் திருமதி.அங்கம்மாளிடம் பெற்றுக்கொள்ளுமாறு கூறியதையடுத்து தானும் காசோலையை அங்கம்மாளிடமிருந்து வாங்கிவிட்டு தற்போது IT returns எழுதிவருவதாகவும் தெரிவித்தார். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நான் முத்தம்மாளை தனியாக அழைத்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடமிருந்த காசோலை எண்.491488 (State Bank of India, Udhagamandalam Branch Date:21.02.2019) கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருக்கையில் இருந்த பதிவறை எழுத்தர் S.மாதுவை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய பர்சிலிருந்து பணம் ரூ.120/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக H6 வருவாய் உதவியாளர் R.இந்திர பிரிய தர்ஷினி என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய பர்சிலிருந்து பணம் ரூ.280/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக H8 வருவாய் உதவியாளர் L.K.உமா மகேஷ்வரியை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய பர்சிலிருந்து பணம் ரூ.20/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக H2 இளநிலை உதவியாளர் M.ராஜேஷ் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய சட்டையின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.100/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அயல்பணியாக ECS சீட்டை பார்க்கும் T.சேஷன் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய இடது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1,400/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக H5 உதவியாளர் P.தங்கமணி என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய பர்சிலிருந்து பணம் ரூ.250/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக H9 வருவாய் உதவியாளர் A.ராஜபாண்டியன் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் இடதுபக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1050/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக H3 வருவாய் உதவியாளர் அங்கம்மாள் என்பவரை விசாரிக்க அவர் தானாகவே

Geethalakshmi
28/2/19

தன்னுடைய பர்சிலிருந்து பணம் ரூ.1180/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக Data Entry Operator L.நதியா என்பவரை விசாரிக்க அவர் தானாகவே தன்னுடைய பர்சிலிருந்து பணம் ரூ.80/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக H7 இருக்கையில் இருந்த S.கோபாலகிருஷ்ணனை விசாரிக்க அவர் அயல்பணியாக இங்கு பணிபுரிவதாகச் சொல்லி தானாகவே தன்னுடைய சட்டையின் மேல்பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.3,280/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது வீட்டிருக்கு எலக்ட்ரிக் பொருள்கள் வாங்க வைத்திருந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக உதவி கணக்கு அலுவலர் அறைக்குச் சென்று உதவி கணக்கு அலுவலர் திரு.P.ராமகிருஷ்ணன் என்பவரை தணிக்கை செய்ய தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.5,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது நேற்றைய தினம் ATM-லிருந்து பணம் ரூ.10,000/-ம் எடுத்ததாகவும், அதில் பணம் ரூ.4,500/-ஐ ரகுராம் லாட்ஜிற்கு தான் தங்குவதற்காக வாடகை கொடுத்ததாவும், மீதி பணம் ரூ.5,500/- தனது சொந்த பணம் என்றதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது அனைத்து அலுவலர்களும் கண்ணியமாக நடத்தப்பட்டார்கள். இந்த திடீர் தணிக்கையானது இன்று 28.02.2019-ம் தேதி மதியம் 12.40 மணிக்கு தொடங்கி 16.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இதில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) திரு.H.பிரகாஷ், நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி மற்றும் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.R.மணிவேலன் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது தலைமை காவலர் சக்தி என்பவரால் லேப்டாப்பில் தட்டச்சு செய்யப்பட்டது. நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 28.02.2019-ம் தேதி 17.30 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2019/AC/NI சட்ட பிரிவு 7 of PC (Amendment) Act, 2018-ன் படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை, தலைமை

Geethalakshmi
28/2/19

ஆசிரியர்கள் திரு.R.சேகர், திருமதி.முத்தம்மா ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட அசல் வாக்குமூலங்கள் மற்றும் காசோலை எண்.491488 ஆகியவற்றை கணம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Muthulakshmi
28/2/19
ஆய்வாளர்
உ.த.க பிரிவு
நீலகிரி மாவட்டம்